## சுருக்கம்

திறன் மிக்க கிருமிகளைப் (Efficient Microbes) பயன்படுத்தி கழிவு நீரால் மாசுபட்டுள்ள நீர்நிலைகளை சுத்தப்படுத்த சோதனை ரீதியிலான முன்னோடித் திட்டத்தில் எஞ்சிய பணிகளைச் செயல்படுத்துதல் – அண்ணா பல்கலைக் கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு மற்றும் திருத்திய நிர்வாக அனுமதி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (நிலை) எண். 163 நாள் 12 .09.2009.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.2, ந.நி (ம) கு.வ துறை நாள் 8.1.2007

மேலும் படிக்க :

2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.723/07/WS 1 நாள். 30.6.2008 மற்றும் 26.05.2009.

-----

**ஆணை:**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்திற்கு கழிவு நீரால் மாசுபட்டுள்ள நீர்நிலைகளை சுத்தப்படுத்துவதற்கான சோதனை ரீதியிலான முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.15,00,000 (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மற்றும் சேவை வரி ரூ1,83,600 (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) ஆக மொத்தம் ரூ.16,83,600 (ரூபாய் பதினாறு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டன.

2. இத்திட்டம் குறித்த தகுதிநிலை அறிக்கையை அளித்த அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மைய இயக்குநர், தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலையில் மாற்றம் செய்யப்பட்டு புதிய கூடுதல் நீர் நிலை தேர்ந்தெடுக்கப்பட்டதாலும், திட்டத்தினை செயல்படுத்துவதற்கு முன் நீர் நிலைக் குட்டையை சுத்தம் செய்ததால் ஏற்பட்ட பிரச்னையாலும், கூடுதல் நிதி தேவைப்படுவதாகவும், எனவே இத்திட்டத்தின் எஞ்சிய பணிகளைச் செயல்படுத்தி, இத்திட்டத்தினை செய்து முடித்திட பின்வரும் பணிகளுக்கென கூடுதலாக ரூ.4.7 இலட்சங்களை (ரூபாய் நான்கு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) அளித்திடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

| வரிசை எண் | பணி விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | நில அளவை, கொரநாட்டுக் குட்டையில் நீரோட்ட அளவீட்டுக் கருவி நிர்மாணித்தல். | 1,59,000 |
| 2 | கொரநாட்டுக் குட்டையில் உள்ள மற்றும் சுற்றியுள்ள திடக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் கூடுதல் நீரோட்டத்தைக் கணக்கிடுதல். | 1,26,000 |
| 3 | மாம்பலம் வடிகாலில் நீரோட்டத்தை சீர்படுத்துதல் மற்றும் மிதக்கும் கழிவுகளை கட்டுப்படுத்துவதற்காக திடக் கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளுதல். | 1,85,000 |
| | மொத்தம் | 4,70,000 |

3. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இச்செயற்குறிப்பை நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலனுப்பியதுடன், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.16,83,600—ல் பின்வரும் தொகைகள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

| வ எண். | காசோலை எண். மற்றும் நாள் | தொகை | செயல் முறை எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | 123577 /14.3.2007 | ரூ.8,41,800/— (50% முன்பணத் தொகை) | 723/07/WS1 நாள் 28.2.2007 |
| 2 | 29499/24.9.2007 | ரூ.6,73,440/— (40%முன்பணத் தொகை | 723/07/WS1 நாள் 24.9.2007 |

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கொரநாட்டுக் குட்டை மற்றும் மாம்பலம் வடிகால் மற்றும் நெசப்பாக்கம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை மேற்குறித்த சோதனை ரீதியிலான முன்னோடித் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், மேற்குறித்த புலம் ஆய்விற்கு உகந்த நிலையில் இல்லாத காரணத்தால் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் அனுமதி மறுத்ததால் மாற்று இடமாக முடிச்சூர் சாலையில் உள்ள தாம்பரம் கோவில் குளம் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், இவ்வாய்வு குறித்த திட்ட அறிக்கை அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்தால் அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்ததுடன், மேற்குறிப்பிட்ட காரணங்களால் இத்திட்டத்திற்கான செலவு கூடுதலானதாகவும், எனவே கூடுதல் நிதி ரூ.4.7 இலட்சம் ஒதுக்குமாறு அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் மேற்படி கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து அக்கருத்துருவை ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே திறன் மிக்க கிருமிகளைப் (Efficient Microbes) பயன்படுத்தி கழிவு நீரால் மாசுபட்டுள்ள நீர்நிலைகளை சுத்தப்படுத்த சோதனை ரீதியிலான முன்னோடித் திட்டத்தில் எஞ்சிய பணிகளைச் செய்து முடிக்க ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ரூ 16,83,600-ல் (ரூ.15,00,000 மற்றும் சேவை வரி ரூ1,83,600) இன்னமும் விடுவிக்கப்படாத ரூ.1,68,360 (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முன்னூற்று அறுபது மட்டும் ) உடன் கூடுதலாக ரூ 4.7 இலட்சங்கள் ( ரூபாய் நான்கு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.6,38,360-ஐ (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்)

அண்ணா பல்கலைக் கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்திற்கு ஒப்பளிப்பதுடன் இம்மாதிரி திட்டத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதியும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் (அதாவது ரூ.6,38,360/– மட்டும்) கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2217 – நகர்ப்பகுதி வளர்ச்சி – 80 பொது – 800 ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – J1 நுண்ணுயிரிகளை சிறந்த முறையில் பயன்படுத்தி தூய்மைக்கேடான நீரை உரிய முறையில் சுத்திகரிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு –09 உதவித்தொகை – 03 குறிப்பிட்ட / திட்டங்களுக்கான உதவித்தொகை".

(த.தொ. கு. 2217–80–800–J1– 0937)

6. தேவையான நிதி, திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் (2009–2010) ஒதுக்கீடு செய்யப்படும் அத்தொகையை பெற்று அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்திற்கு வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. எனவே 2009–2010ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துரு அனுப்பும்பொழுது, மேற்படி தொகையையும் தவறாமல் சேர்த்து அரசுக்கு கருத்துரு அனுப்பும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 49899/MAWS/09, நாள் 11.9.2009, மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.692 (அறுநூற்று தொன்னூற்று இரண்டு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 005.
இயக்குநர், சுற்றுச்சூழல் ஆய்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.
(நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 005.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 018. (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

**நகல்:**
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (வரவு செலவு / அநமு.II / நநி.2) துறை, சென்னை– 600 009.
நிதித் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் /வ.செ பொதுII) துறை, சென்னை–600 009.
இ.கோ./உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//